## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்”** 20.01.2026 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## விருத்தாசலத்தில் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய

# தலைமைக் காவலர் சரவணனுக்குப் பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – வலைதளப் பதிவில் நெகிழ்ச்சி!

சென்னை, ஜன.15-

விருத்தாச்சலத்தில் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய தலைமைக் காவலர் சரவணனைப் பாராட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், “குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய தலைமைக் காவலர் சரவணனுக்குப் பாராட்டுகள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**அன்பின் வழியது உயிர்நிலை சில நாட்களுக்கு முன்னர் காவல்துறையில் பணிநியமன ஆணைகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டபோது, “காவலர் பணி மனிதநேயத்தோடு இணைந்ததாக இருக்க வேண்டும். வீரத்தின் அடித்தளம் அன்பு தான்” என அறிவுறுத்தி இருந்தேன்.**

**அதனை மெய்ப்பிக்கும் வகையில் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியுள்ள தலைமைக் காவலர் சரவணன் அவர்களுக்குப் பாராட்டுகள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னை – எழும்பூர் அருங்காட்சியகத்தில் – காணும் பொங்கலன்று நடைபெறுகிறது!

# “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”வில் - அலங்கார ஆடை அணிவகுப்பு!

## பத்திரிகையாளர்கள் சந்திப்பில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜன. 15-

சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழாவில் அலங்கார ஆடை அணிவகுப்பு எழும்பூர் அருங்காட்சியகத்தில் காணும் பொங்கலன்று நடைபெறுகிறது.

சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் பொங்கல் திருவிழாவின் போது ‘சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’ என்ற மாபெரும் கலைவிழா கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இந்த ஆண்டின் கலை நிகழ்ச்சிகள் 14.1.2026 அன்று எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. தொடக்க விழாவை அடுத்து, ‘சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா’ கலை நிகழ்ச்சிகள் சென்னை, தாம்பரம் , ஆவடி உள்ளிட்ட 20 இடங்களில் ஜனவரி 15 முதல் 18 வரை நான்கு நாட்கள் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் முன்னெடுப்பில் நடைபெறும் சென்னை சங்கமத்தில் முதன்முறையாக கோ- ஆப்டெக்ஸ் மற்றும் கலை பண்பாட்டுத்துறை இணைந்து நடத்தும் அலங்கார ஆடை அணிவகுப்பு நிகழ்ச்சி ஜனவரி 17 ஆம் நாள் சனிக்கிழமை காணும் பொங்கலன்று சென்னை அருங்காட்சியகத்தின் வளாகத்தில் தேசிய கலைக்கூடம் முன்புறம் மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.



சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (13.01.2026) நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பத்திரிகையாளர்களை சந்தித்தார். கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி. கவிதா ராமு, கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (பொ) திருமதி. ச.வளர்மதி ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கலைஞர்கள் பத்மஸ்ரீ விருது பெற்ற பறை ஆசிரியர் அலங்காநல்லூர் வேலு ஆசான், சிலம்பம் ஐஸ்வர்யா மணிவண்ணன், கானா - பிரபா, நடன இயக்குனர் - அனுஷா விஸ்வநாதன், நடன கலைஞர்கள் - காளி வீரபத்திரன் மற்றும் திருநங்கை பொன்னி, கரகக்கலைஞர்கள் கலைமாமணி தேன்மொழி இராஜேந்திரன் மற்றும் கோவை அனுஷா, பிரபல மக்கள் இசை பாடகிகள்- இசைவாணி மற்றும் சுகந்தி, பாடகர் ஜெயசித்தன், கானா-முத்து, காவடி ஆட்டக்கலைஞர் சுந்தரமூர்த்தி, காளை ஆட்டக்கலைஞர் இராஜன், கட்டை கூத்துக்கலைஞர் திலகவதி மற்றும் பலர் இந்த மரபார்ந்த உடைகளுக்கான அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பிக்கவுள்ளனர். இந்த ஆடை அணிவகுப்பு நிகழ்வின் போது அந்தந்த கலைஞர்களின் தனி நிகழ்வும் விழா மேடையில் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாட்டின் பெருமை வாய்ந்த பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ஆடைகள் அணிந்து கலைஞர்கள் கலந்துக் கொள்ளும் அலங்கார ஆடை அணிவகுப்பு நடைபெறுகிறது.

இவ்வாறு பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.

## விடுமுறை அறிவிப்பு!

தை முதல் நாள் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாளையொட்டி ‘முரசொலி’ அலுவலகத்துக்கு 15.01.2026 - வியாழக்கிழமை மற்றும் 16.01.2026 - வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்கள் விடுமுறை.

எனவே ‘முரசொலி’யின் அடுத்த இதழ் 18.01.2026 -ஞாயிறு அன்று வழக்கம் போல் வெளிவரும்.

**- தலைமை நிர்வாகி**
**முரசொலி**

# அ.தி.மு.க.வை அமித்ஷாவுக்கு அடிமைக்கட்சியாக்கிய எடப்பாடி!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கடும் தாக்கு!

அரியலூர், ஜன. 15-

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் எனும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளரிடம் பேசினார். அ.தி.மு.க.வை தேடி பா.ஜ.க. வந்து கூட்டணி பேசிய நிலையில் தற்போது பா.ஜ.க.வை தேடி அ.தி.மு.க. சென்று பேச்சுவார்த்தை நடத்தும் நிலை உள்ளது குறித்து செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில்...

கடந்த காலங்களில் எல்லாம் பார்த்து வருகிறோம் எடப்பாடி பழனிச்சாமி வீரா வசனம் பேசுவார். பிறகு டெல்லி சென்று சரண்டர் ஆவார். ஒவ்வொரு முறையும் இந்த காட்சி நடைபெறும். இப்போதும் அந்த காட்சி நடைபெற்றிருக்கிறது. போன வாரத்தில் நாங்கள் தனித்து ஆட்சி என்று அறிவித்தவர், அடுத்த இரண்டு நாட்களில் டெல்லி சென்று சரண்டர் ஆகிறார்.

டெல்லிக்கு அடிமைக் கட்சி என முதல்வர் அ.தி.மு.க.வை குறிப்பிடுவது போல, அமித்ஷா அடிமை கட்சி என்கின்ற அளவிற்கு அ.தி.மு.க.வை எடப்பாடி பழனிச்சாமி அடமானம் வைத்துள்ளது தான் இது வெளிப்படுத்துகிறது.

இருபது டபுள் டக்கர் பேருந்துகள் முதற்கட்டமாக வாங்குவதற்கு மாநகர போக்குவரத்து கழகம் டெண்டர் விட்டுள்ளது அது முடிந்தவுடன் முதற்கட்டமாக சென்னையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனநாயகன் பட விவகாரத்தில் முதலமைச்சரும் கருத்து தெரிவித்துள்ளார்கள் இன்று தணிக்கை வாரியம் மத்திய அரசின் ஆயுதங்களில் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்கள் அதே தான் எங்களது நிலைப்பாடு என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



கடலூர் மாநகராட்சி சார்பில், சமத்துவப் பொங்கல் விழா, மேயர் திருமதி சுந்தரி ராஜா தலைமையில் மாநகராட்சியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் துணை மேயர் பா.தாமரைச்செல்வன் கடலூர் மாநகராட்சி ஆணையர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் சங்கீதா, பிரசன்னா, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் மு.சரிதா, செந்தில்குமாரி, சுபாஷினி, சசிகலா, மாநகராட்சி சுகாதார அதிகாரி டாக்டர் பரிதா உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# ‘தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ விரிவான சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

பத்தாண்டு காலம் இருண்டு கிடந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்து, எல்லோர்க்கும் எல்லாம் என ஒளிமயமான பாதையில் பயணிக்கச்செய்திருக்கும் திராவிட மாடல் அரசு கடந்த தேர்தலில் அளித்த 505 வாக்குறுதிகளில் 404-க்கும் அதிகமானவற்றை நிறைவேற்றி, சொன்னதைச் செய்த அரசாக, சொல்லாததையும் செய்த அரசாக மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளது.

சாதனைகளின் தொடர்ச்சியாக, அடுத்த ஐந்தாண்டுகளுக்கான வளர்ச்சியைத் திட்டமிட ‘திராவிட மாடல் 2.0’ தயாராகி வருகிறது. இந்த புதிய பயணத்திற்கான தேர்தல் அறிக்கை என்பது வெறும் காகிதமல்ல; அது மக்களின் குரலாக இருக்க வேண்டும் என்ற கழக தலைவர் அவர்களின் விருப்பத்தின்படி, ஒவ்வொரு தமிழ்நாட்டு குடிமகனின் தேவையையும் பிரதிபலிக்கும் வகையில், மக்கள் பங்கேற்புடன் கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையை உருவாக்க கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு தயாராகி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டலின்படி, 2026 சட்டப் பேரவை தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஜனவரி 19 -ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் திருமிகு. கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், முனைவர் கோவி.செழியன், முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, எம்.எம். அப்துல்லா, பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவர் எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 அடங்கிய குழு பயணம் செய்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச்செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன்தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்தைச் சார்ந்த வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழிற்சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக்குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**2026 - தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கூட்டங்கள் நடைபெறும் இடங்கள்**

| வ எண் | நாள் | கிழமை | நேரம் | இடம் | உள்ளடக்கப்பட்ட கழக மாவட்டங்கள் | சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 19.01.2026 | திங்கள் | காலை | வேலூர் | வேலூர் வடக்கு<br>வேலூர் தெற்கு<br>இராணிப்பேட்டை<br>திருப்பத்தூர்<br>திருவண்ணாமலை தெற்கு<br>திருவண்ணாமலை வடக்கு | 21 |
| 2 | 19.01.2026 | திங்கள் | மாலை | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு<br>கிருஷ்ணகிரி மேற்கு<br>தர்மபுரி மேற்கு<br>தர்மபுரி கிழக்கு. | 11 |
| 3 | 27.01.2026 | செவ்வாய் | காலை | தஞ்சாவூர் | மயிலாடுதுறை<br>நாகப்பட்டினம்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர் வடக்கு<br>தஞ்சாவூர் மத்திய<br>தஞ்சாவூர் தெற்கு | 18 |
| 4 | 27.01.2026 | செவ்வாய் | மாலை | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி தெற்கு<br>திருச்சிராப்பள்ளி மத்திய<br>திருச்சிராப்பள்ளி வடக்கு<br>பெரம்பலூர்<br>அரியலூர்<br>புதுக்கோட்டை வடக்கு<br>புதுக்கோட்டை தெற்கு | 19 |
| 5 | 30.01.2026 | வெள்ளி | காலை | திருநெல்வேலி | தூத்துக்குடி வடக்கு<br>தூத்துக்குடி தெற்கு<br>தென்காசி வடக்கு<br>தென்காசி தெற்கு<br>திருநெல்வேலி மேற்கு<br>திருநெல்வேலி மத்திய<br>திருநெல்வேலி கிழக்கு<br>கன்னியாகுமரி கிழக்கு<br>கன்னியாகுமரி மேற்கு | 22 |
| 6 | 30.01.2026 | வெள்ளி | மாலை | ராமநாதபுரம் | சிவகங்கை<br>விருதுநகர் தெற்கு<br>விருதுநகர் வடக்கு<br>ராமநாதபுரம் | 15 |
| 7 | 01.02.2026 | ஞாயிறு | காலை | கடலூர் | விழுப்புரம் வடக்கு<br>விழுப்புரம் மத்திய<br>விழுப்புரம் தெற்கு<br>கள்ளக்குறிச்சி வடக்கு<br>கள்ளக்குறிச்சி தெற்கு<br>கடலூர் மேற்கு<br>கடலூர் கிழக்கு | 20 |
| 8 | 04.02.2026 | புதன் | காலை | அண்ணா அறிவாலயம் | துறை சார்ந்த குழுக்களுடனான சந்திப்பு | -- |
| 9 | 05.02.2026 | வியாழன் | காலை | அண்ணா அறிவாலயம் | துறை சார்ந்த குழுக்களுடனான சந்திப்பு | -- |
| 10 | 06.02.2026 | வெள்ளி | மாலை | சேலம் | சேலம் கிழக்கு<br>சேலம் மத்திய<br>சேலம் மேற்கு<br>நாமக்கல் கிழக்கு<br>நாமக்கல் மேற்கு | 17 |
| 11 | 07.02.2026 | சனி | காலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு<br>ஈரோடு மத்திய<br>ஈரோடு தெற்கு<br>திருப்பூர் கிழக்கு<br>திருப்பூர் வடக்கு<br>திருப்பூர் மத்திய<br>திருப்பூர் தெற்கு | 16 |
| 12 | 07.02.2026 | சனி | மாலை | கோவை | நீலகிரி<br>கோவை வடக்கு<br>கோவை தெற்கு<br>கோவை மாநகர்<br>கரூர் | 17 |
| 13 | 10.02.2026 | செவ்வாய் | மாலை | மதுரை | திண்டுக்கல் கிழக்கு<br>திண்டுக்கல் மேற்கு<br>மதுரை வடக்கு<br>மதுரை மாநகர்<br>மதுரை தெற்கு<br>தேனி தெற்கு<br>தேனி வடக்கு | 21 |
| 14 | 14.02.2026 | சனி | மாலை | சென்னை | திருவள்ளூர் கிழக்கு<br>திருவள்ளூர் மேற்கு<br>திருவள்ளூர் மத்திய<br>காஞ்சிபுரம் வடக்கு<br>காஞ்சிபுரம் தெற்கு | 16 |
| 15 | 15.02.2026 | ஞாயிறு | காலை | சென்னை | சென்னை தெற்கு<br>சென்னை கிழக்கு<br>சென்னை வடகிழக்கு<br>சென்னை வடக்கு<br>சென்னை மேற்கு<br>சென்னை தென்மேற்கு | 21 |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.01.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.